# 8th Std சமூக அறிவியல்

## இரண்டாம் பருவம்

## Book Back Questions

www.winmeen.com

# 8th Social Science 2nd Term Book Back Questions in Tamil

## 8ஆம் வகுப்பு – சமூக அறிவியல் – இரண்டாம் பருவம்

## அலகு – 5 இந்தியாவில் கல்வி வளர்ச்சி

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. வேதம் என்ற சொல் -------------- லிருந்து வந்தது

**(அ) சமஸ்கிருதம்** (ஆ) இலத்தீன் (இ) பிராகிருதம் (ஈ) பாலி

2. பின்வருவனவற்றுள் எது பண்டைய காலத்தில் கற்றலுக்கான முக்கிய மையமாக இருந்தது?

**(அ) குருகுலம்** (ஆ) விகாரங்கள் (இ) பள்ளிகள் (ஈ) இவையனைத்தும்

3. இந்தியாவின் மிகப் பழமையான நாளந்தா பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்

(அ) உத்திரப்பிரதேசம் (ஆ) மகாராஷ்டிரம் **(இ) பீகார்** (ஈ) பஞ்சாப்

4. தட்சசீலத்தை யுனெஸ்கோ அமைப்பு உலக பாரம்பரிய தளமாக எப்போது அறிவித்தது?

(அ) 1970 (ஆ) 1975 **(இ) 1980** (ஈ) 1985

5. இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பிய நாடு எது?

(அ) இங்கிலாந்து (ஆ) டென்மார்க் (இ) பிரான்சு **(ஈ) போர்ச்சுக்கல்**

6. இந்தியாவில் கல்வி மேம்பாட்டிற்காக ஆண்டுதோறும் மானியமாக 1 இலட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்த பட்டய சட்டம் எது?

**(அ) 1813ஆம் ஆண்டு பட்டய சட்டம்** (ஆ) 1833ஆம் ஆண்டு பட்டய சட்டம்

(இ) 1853ஆம் ஆண்டு பட்டய சட்டம் (ஈ) 1858ஆம் ஆண்டு பட்டய சட்டம்

7. பின்வரும் குழுக்களில் எந்தக் குழு பல்கலைக்கழக மானியக் குழுவினை அமைக்கப்பரிந்துரைத்தது?

(அ) சார்ஜண்ட் அறிக்கை, 1944 **(ஆ) இராதாகிருஷ்ணன் கல்விக்குழு, 1948**

(இ) கோத்தாரி கல்விக்குழு, 1964 (ஈ) தேசியக் கல்விக்கொள்கை, 1968

8. இந்தியாவில் புதிய கல்விக் கொள்கை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

(அ) 1992 (ஆ) 2009 **(இ) 1986** (ஈ) 1968

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வேதம் என்ற சொல்லின் பொருள் -------

**விடை: அறிவு**

2. தட்சச்சீல இடிபாடுகளை கண்டறிந்தவர் ---------

**விடை: அலெக்சாண்டர் கன்னிங்காம்**

3. டில்லியில் மதரஸாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் --------------- ஆவார்

**விடை: இல்துத்மிஷ்**

4. புதிய கல்விக் கொள்கை திருத்தப்பட்ட ஆண்டு ----------

**விடை: 1992**

5. 2009ஆம் ஆண்டு இலவசக் கட்டாய கல்வி சட்டத்தின் விதிகளை அமல்படுத்துகின்ற முதன்மையான அமைப்பு ------------ ஆகும்

**விடை: அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA)**

6. பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ------------

**விடை: 1956**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. இட்சிங் | அ. சரஸ்வதி மகால் |
| 2. பிரான்சிஸ் சேவியர் | ஆ. இந்திய கல்வியின் மகா சாசனம் |
| 3. உட்ஸ் கல்வி அறிக்கை | இ. மதராஸில் மேற்கத்திய கல்வி |
| 4. இரண்டாம் சரபோஜி | ஈ. கொச்சி பல்கலைக்கழகம் |
| 5. சர் தாமஸ் மன்றோ | உ. சீன அறிஞர் |

**விடை: 1-உ, 2-ஈ. 3-ஆ. 4-அ, 5-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. சரகர் மற்றும் சுஸ்ருதர் ஆகியோரின் குறிப்புகள் மருத்துவத்தைக் கற்றுக்கொள்ள ஆதாரங்களாக இருந்தன.

**விடை: சரி**

2. கோயில்கள் கற்றல் மையங்களாக திகழ்ந்ததோடு அறிவைப் பெருக்கிகொள்ளும் இடமாகவும் இருந்தது

**விடை: சரி**

3. கல்வியை ஊக்குவிப்பதில் அரசர்களும், சமூகமும் தீவிர அக்கறை காட்டியதாக ஜாதகக் கதைகள் குறிப்பிடுகின்றன

**விடை: சரி**

4. இடைக்கால இந்தியாவில் பெண் கல்வி நடைமுறையில் இல்லை

**விடை: தவறு**

5. RMSA திட்டமானது பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்டது

**விடை: தவறு**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. i. நாளந்தா பல்கலைக்கழகம் கி.பி. (பொ.ஆ) ஐந்தாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது

ii. பண்டைய இந்தியாவில் மாணவர்களை தேர்ந்தெடுப்பது முதல் அவர்களின் பாடத்திட்டத்தினை வடிவமைப்பது வரை அனைத்து அம்சங்களிலும் ஆசிரியர்கள முழுமையான சுயாட்சி கொண்டிருந்தனர்

iii. பண்டைய காலத்தில் ஆசிரியர்கள் கணக்காயர் என்று அழைக்கப்பட்டனர்

iv. சோழர்கள் காலத்தில் புகழ்பெற்ற கல்லூரியாக காந்தளூர் சாலை இருந்தது

(அ) i மற்றும் ii சரி (ஆ) ii மற்றும் iv சரி

(இ) iii மற்றும் iv சரி **(ஈ) i, ii மற்றும் iii சரி**

**சரியான இணையைக் கண்டறியும்:**

1. அ. மக்தப்கா - இடைநிலைப்பள்ளி

**ஆ. 1835ஆம் ஆண்டின் மெக்காலேயின் குறிப்பு - ஆங்கிலக்கல்வி**

இ. கரும்பலகைத்திட்டம் - இடைநிலைக்கல்வி குழு

ஈ. சாலபோகம் - கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள்

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. மடாலயங்கள் மற்றும் விகாரங்கள் மூலமாக ---------- அறிஞர்கள் தங்கள் கல்விப் பணியை மேற்கொண்டனர்

**(அ) புத்த** (ஆ) சமண (இ) ஜொராஸ்டிரிய (ஈ) கிறித்துவ

2. ------------- இந்தியாவில் பெண்கள் கல்வி அதிகமாக இருந்தது

(அ) நவீன கால **(ஆ) இடைக்கால**

(இ) வரலாற்றுக்கு முந்தைய கால (ஈ) இவற்றில் எதுவுமில்லை

3. --------------- அஹோபில மடாலயம் கல்வி வளர்ச்சிக்காக நிறுவப்பட்டதாகும்

(அ) வேலூர் (ஆ) கோயம்புத்தூர் **(இ) ஸ்ரீரங்கம்** (ஈ) நீலகிரி

4. சமணப் பள்ளிகள் மற்றும் புத்த விகாரங்கள் ஆகியவற்றை எப்போதும் மக்களுக்கு -------- வழங்குவதில் முக்கிய பங்கு ஆற்றின

**(அ) கல்வி** (ஆ) தொழில் (இ) சமய விழிப்புணர்ச்சி (ஈ) நலவாழ்வு

5. ---------ஐ சேர்ந்த ராஜாஜெய்சிங், அறிவியல் பாடங்களின் கற்றலை ஊக்குவித்தார்

(அ) ஜோத்பூர் **(ஆ) ஜெய்பூர்** (இ) பஞ்சாப் (ஈ) லக்னோ

6. 1812ஆம் ஆண்டு Dr.C.S.ஜான் என்பவர் ------------யில் 20 இலவச பள்ளிகளை நிறுவினார்

**(அ) தரங்கம்பாடி** (ஆ) டாமன் (இ) மசூலிப்பட்டினம் (ஈ) சன்சரா

7. இரண்டு ஜெர்மன் பிஷப்புகள் சீகன்பாலகு மற்றும் பிளட்சாம் ஆகியோர் ---------ல் ஆசிரியர்களுக்கான பள்ளிகள் மற்றும் பயிற்சி கல்லூரியைத் தொடங்கினர்

(அ) மைசூர் (ஆ) மும்பை (இ) சூரத் **(ஈ) திருவிதாங்கூர்**

8. Dr.மில்டன் என்பவர் ஒரு மிஷினரி கல்லூரியை ---------------இல் தொடங்கினார்

(அ) மும்பை (ஆ) சென்னை **(இ) கொல்கத்தா** (ஈ) டெல்லி

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மாணவர்களில் திறன்களை மதிப்பீடு செய்வதற்காக ------------- விவாதங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன

**விடை: இலக்கிய**

2. கல்வி அளிப்பதிலும், கற்றல் மையமாக செயல்படுவதிலும் --------- முக்கிய பங்கு வகித்தன.

**விடை: கோயில்கள்**

3. குருவுக்கும் மாணவனுக்குமிடையேயான உறவு வலுப்பெறும் இடமாக ---------- திகழ்ந்தது

**விடை: குருகுலம்**

4. பண்டைய இந்திய நகரமாக இருந்த --------- தற்போது வடமேற்கு பாகிஸ்தானில் உள்ளது

**விடை: தட்சசீல**

5. உலகின் பழமையான பல்கலைக்கழகங்களின் ஒன்று --------- ஆகும்

**விடை: நாளந்தா பல்கலைக்கழகம்**

6. சுல்தான்கள் மற்றும் பிரபுக்களால் பல ---------- அமைக்கப்பட்டன

**விடை: மதரசாக்கள்**

7. இடைக்காலத்தில் இந்தியாவில் ---------- கல்வி அதிகமாக இருந்தது

**விடை: பெண்கள்**

8. ஜெய்பூரைச் சேர்ந்த ---------- அறிவியல் பாடங்களின் கற்றலை ஊக்குவித்தார்

**விடை: ராஜாஜெய்சிங்**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. சாணக்யா | அ. ஜெர்மன் பிஷப் |
| 2. யுவான் சுவாங் | ஆ. கல்விக்குழு |
| 3. சீகன் பால்கு | இ. வார்தா |
| 4. Dr.இராதாகிருஷ்ணன் | ஈ. அர்த்தசாஸ்திரம் |
| 5. காந்தியடிகள் | உ. சீன அறிஞர் |

**விடை: 1-ஈ, 2-உ, 3-அ, 4-ஆ. 5-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. குருகுல கல்வி முறையில் குருவின் குடும்பம் வீட்டுப் பள்ளி அல்லது ஆசிரமம் ஆக செயல்பட்டது

**விடை: சரி**

2. புதிய நாளந்தா பல்கலைக்கழகம் நாகரிகங்களுக்கிடையிலான உரையாடல் மையமாக கருதப்படவில்லை

**விடை: தவறு**

3. ஐரோப்பிய குடியேற்றத்தை தொடர்ந்து சமயப் பரப்பு குழுவினரின் வருகையால் இந்தியாவில் நவீன கல்விமுறை தொடங்கவில்லை

**விடை: தவறு**

4. 1813ஆம் ஆண்டின் பட்டயச்சட்டம், இந்தியாவில் கல்வியை மேம்படுத்துவதற்காக ஆண்டுதோறும் 1 இலட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தது

**விடை: சரி**

5. வர்தா திட்டத்தின் மூலம் சுரண்டலையும், சமூக மையப்படுத்துதலையும் நீக்கிவிட்டு அகிம்சை சமுதாயம் உருவாக்க விரும்பினார்

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. i. நவீனகால இந்தியாவில் கல்விமுறை உலோமாவின் கட்டுப்பாட்டில் இருந்தது.

ii. ஸ்ரீரங்கத்தில் உள்ள அஹோபிலா மடாலயம் இடைக்காலத்தில் கல்வி வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட மடாலயம் ஆகும்

iii. சமணப் பள்ளிகள் மற்றும் புத்த விகாரங்கள் ஆகியவைகள் எப்போதும் மக்களுக்கு கல்வி வழங்குவதில் முக்கிய பங்கு ஆற்றின

iv. இடைக்காலத்தின் முற்பகுதியில் ஆங்கிலேயர்கள், இந்தியாவிற்கு வந்து ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தினர்

(அ) i மற்றும் ii சரி **(ஆ) i மற்றும் iii சரி**

(இ) iii மற்றும் iv சரி (ஈ) iv மற்றும் i சரி

**தவறான இணையைக் கண்டறியும்:**

1.
1. 1975 - காந்திய கிராமிய கல்லூரி
2. 1956 - மதிய உணவுத்திட்டம்
3. **1996 - தேசிய கல்விக் கொள்கை**
4. 1929 - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## அலகு – 6 இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. பின்வருவனவற்றில் மக்களின் எந்த செயல்பாடுகள் கைவினைகளில் சாராதவை?

(அ) கல்லிருந்து சிலையை செதுக்குதல் (ஆ) கண்ணாடி வளையல் உருவாக்குதல்

(இ) பட்டு சேலை நெய்தல் **(ஈ) இரும்பை உருக்குதல்**

2. ------------- தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்

**(அ) நெசவு** (ஆ) எ.ஃகு (இ) மின்சக்தி (ஈ) உரங்கள்

3. கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் காணப்படும் முக்கிய இடம் ---------

(அ) பம்பாய் (ஆ) அகமதாபாத் **(இ) கான்பூர்** (ஈ) டாக்கா

4. இந்தியாவின் முதல், மூன்று ஐந்தாண்டத் திட்டங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது என்ன?

(அ) மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்

(ஆ) எழுத்தறிவின்மையைக் குறைத்தல்

**(இ) வலுவான தொழிற்துறை தளத்தை உருவாக்குதல்**

(ஈ) பெண்களுக்கு அதிகாரமளித்தல்

5. இந்தியாவில் தொழில்மயம் அழிதலுக்கு காரணம் அல்லாதது எது?

(அ) ஆட்சியாளர்களின் ஆதரவின்மை

(ஆ) இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டி

**(இ) இந்தியாவின் தொழிற்துறை கொள்கை**

(ஈ) பிரிட்டிஷாரின் வர்த்தக கொள்கை

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. --------- இந்திய மக்களின் வாழ்க்கையின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது

**விடை: கைவினைப் பொருட்கள்**

2. தொழிற்புரட்சி நடைபெற்ற இடம் ----------

**விடை: இங்கிலாந்து**

3. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு -------------

**விடை: 1839**

4. கொல்கத்தா அருகிலுள்ள ஹீக்ளி பள்ளத்தாக்கில் -------------- இடத்தில் சணல் தொழிலகம் ஆரம்பிக்கப்பட்டது

**விடை: ரிஷ்ரா**

5. ----------- ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தூரததை குறைந்தது

**விடை: சூயஸ்கால்வாய்**

**பொருத்துக:**

1. 1. தவர்னியர் அ. செல்வச் சுரண்டல் கோட்பாடு

2. டாக்கா ஆ. காகித ஆலை

3. தாதாபாய் நௌரோஜி இ. கைவினைஞர்

4. பாலிகன்ஜ் ஈ. மஸ்லின் துணி

5. ஸ்மித் உ. பிரெஞ்சு பயணி

**விடை: 1-உ, 2-ஈ, 3-அ, 4-ஆ. 5-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. இந்தியா பருத்தி மற்றும் பட்டுத் துணிகளுக்கு புகழ்வாய்ந்தது

**விடை:சரி**

2. இந்தியாவில் ஆங்கிலேயர்களால் இரயில்வே அறிமுகப்படுத்தப்பட்டது

**விடை: சரி**

3. நவீன முறையில் முதன்முதலாக இரும்பு ஜாம்ஷெட்பூரில் உற்பத்தி செய்யப்பட்டது

**விடை: தவறு**

4. 1948ஆம் ஆண்டு தொழிலக கொள்கையானது கலப்பு பொருளாதாரத்தை கொண்டு வந்தது

**விடை: சரி**

5. பத்தாவது மற்றும் பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டம் தீவிர வேளாண்மை உற்பத்தி வளர்ச்சிக்குச் சான்றாக உள்ளது

**விடை: தவறு**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. பின்வருவனவற்றில் சரியானவைகளை தேர்ந்தெடுத்துக் குறியிடவும்

i. எட்வர்ட் பெய்ன்ஸ் கருத்துப்படி 'பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இங்கிலாந்து'

ii. இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்சாலைக்கு முன்னால் இந்தியாவில் கிராம கைவினை தொழில் இரண்டாவது பெரிய தொழிற்சாலையாக அமைந்தது

iii. சௌராஷ்டிரா தகர தொழிற்சாலைக்கு பெயர் பெற்றது

iv. சூயஸ் கால்வாய் கட்டப்பட்டதால் இந்தியாவில் பிரிட்டிஷாரின் பொருட்கள் மலிவாக கிடைக்க வழிவகை உருவானது

(அ) i மற்றும் ii சரி **(ஆ) ii மற்றும் iv சரி**

(இ) iii மற்றும் iv சரி (ஈ) i, ii மற்றும் iii சரி

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. இந்தியாவின் 1854ஆம் ஆண்டு ------------இல் பருத்தி நூற்பு ஆலை தொடங்கப்பட்டது

   **(அ) பம்பாய்** (ஆ) கல்கத்தா (இ) ஹைதராபாத் (ஈ) குஜராத்

2. டாட்டா இரும்பு எ.்.கு நிறவனம் தொடங்கப்பட்ட ஆண்டு ----------

   (அ) 1905 (ஆ) 1906 **(இ) 1907** (ஈ) 1908

3. மூலப்பெருள்களின் அடிப்படையில் தொழில்களை ------------ மற்றும் ------------- என வகைப்படுத்தலாம்

   (அ) கனிம மற்றும் தனியார் **(ஆ) வேளாண் மற்றும் கனிம**

   (இ) பொது மற்றும் தனியார் (ஈ) அடிப்படை மற்றும் முக்கிய

4. ----------ஆம் ஆண்டு தொழிற்துறை கொள்கை வெளியிடப்பட்டது

   (அ) 1958 (ஆ) 1968 (இ) 1948 **(ஈ) 1956**

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. --------------- தொழில் இந்தியாவின் பழமையான தொழில் ஆகும்

   **விடை: நெசவு**

2. 1870ஆம் ஆண்டு முதல் காகித ஆலை கல்கத்தாவுக்கு அருகில் ---------- என்ற இடத்தில் துவங்கப்பட்டது

   **விடை: பாலிகன்ஜ்**

3. ---------- கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் முக்கியத்துவம் பெற்றன.

   **விடை: கான்பூரில்**

4. 1907ஆம் ஆண்டு -------------- என்ற இடத்தில் டாட்டா இரும்பு மற்றும் எ.்.கு நிறுவனம் அமைக்கப்பட்டது

   **விடை: ஜாம்ஷெட்பூர்**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. சௌராஷ்டிரா | அ. தோட்டத்தொழில் |
| 2. எட்வர்ட்பெயின்ஸ் | ஆ. காகித ஆலை |
| 3. ஐரோப்பியர்கள் | இ. டாட்டா இரும்பு மற்றும் எ.்.கு நிறுவனம் |
| 4. கல்கத்தா | ஈ. வெண்கலம் |
| 5. TISCO | உ. பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இந்தியா |

**விடை: 1-ஈ, 2-உ, 3-அ, 4-ஆ. 5-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. இந்தியாவில் பிரிட்டிஷாரின் வெற்றி இந்திய பொருளாதாரத்தை காலனித்துவ பொருளாதாரமாக மாற்றியது

**விடை: சரி**

2. தோட்டத்தொழில் முதன்முதலில் ஐரோப்பியர்களை ஈர்த்தது

**விடை: சரி**

3. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்தியாவில் தொழில்மயமாக்கலின் செயல்பாடு தொடங்கியது

**விடை: சரி**

4. இரண்டு உலகப்போர்கள் தொழில்களின் வளர்ச்சிக்கு ஒரு உத்வேகத்தை அளிக்கவில்லை

**விடை: தவறு**

5. பம்பாய் மற்றும் அகமதாபாத்தில் பருத்தி ஆலைகள் திறக்கப்பட்டன

**விடை: சரி**

## புவியியல்

## அலகு – 4 இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல்

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. மக்கள் ------------ லிருந்து ------------க்கு நல்ல வேலை வாய்ப்பினைத் தேடி குடிபெயர்கின்றனர்

**(அ) கிராமப்புறத்திலிருந்து நகர்புறத்திற்கு** (ஆ) நகர் புறத்திலிருந்து கிராமப்புறத்திற்கு

(இ) மலையிலிருந்து சமவெளிக்கு (ஈ) சமவெளியிலிருந்து மலைப்பகுதிக்கு

2. ஒரு நபர் சொந்த நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு இடம் பெயர்தல் --------- எனப்படுகிறது

(அ) குடிபுகுபவர் (ஆ) அகதி **(இ) குடியேறுபவர்** (ஈ) புகலிடம் தேடுபவர்

3. வளம் மிகுந்த வேளாண்மை நிலம் தேடி இடம் பெயர்தல் நடைபெறுவது ---------

**(அ) கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு** (ஆ) கிராமத்தில் இருந்து நகரத்திற்கு

(இ) நகரத்தில் இருந்து கிராமத்திற்கு (ஈ) நகரத்தில் இருந்து நகரத்திற்கு

4. போரின் காரணமாக நடைபெறும் குடிபெயர்வு ----------ஐ சார்ந்தது

(அ) மக்களியல் (ஆ) சமூக மற்றும் கலாச்சாரம் **(இ) அரசியல்** (ஈ) பொருளாதாரம்

5. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் நகரமயமாக்கலுக்கு முக்கிய காரணம் -----------------

**(அ) மிகையான உணவு தானிய உற்பத்தி** (ஆ) கால்நடை வளர்ப்பு

(இ) மீன் பிடித்தல் (ஈ) வேட்டையாடுதல்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. நகரமயமாதல் --------- எண்ணிக்கையிலான காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன

**விடை: மூன்று**

2. ------------ என்பது கிராமப்புற பகுதிகளில் செயல்படும் முக்கிய உந்துக் காரணியாகும்

**விடை: வேலையின்மை**

3. இந்தியாவின் ------------ மாநகரம் உலகிலேயே இரண்டாவது அதிக நகர மக்கள் தொகையைக் கொண்டது

**விடை: புது தில்லி**

4. ஒரு நபர் தன்னார்வத்துடனும் விருப்பத்துடனும் நல்ல வசிப்பிடம் தேடி இடம் பெயர்தல் ------------ இடம் பெயர்பு எனப்படும்

**விடை: தன்னார்வ**

5. நவீன காலத்தில் நகர்ப்புற வளர்ச்சி ------------ வளர்ச்சியால் அதிகரிக்கிறது

**விடை: தொலைத்தொடர்பு, போக்குவரத்து மற்றும் தொழிற்துறை**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. குடிபெயர்தல் | அ. குடிபுகுபவர் |
| 2. குடியேற்றம் | ஆ. வெளியேறுதல் |
| 3. இழுக்காரணி | இ. வேலை வாய்ப்பின்மை |
| 4. உந்து காரணி | ஈ. சமூக மற்றும் பண்பாட்டு இடம் பெயர்வு |
| 5. திருமணம் | உ. வேலை வாய்ப்புகள் |

**விடை: 1-ஆ. 2அ, 3-உ, 4-இ, 5-ஈ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. குடிசைப்பகுதிகள் பொதுவாக பெருநகரங்களில் காணப்படுகிறது

**விடை: சரி**

2. நவீன காலத்தில், ஒரே சமயத்தில் அதிக மக்களின் இடம்பெயர்வு நடைபெறுவதில்லை

**விடை: சரி**

3. நகரமயமாக்கம் குறுகியக் கால வரலாறுடையது

**விடை: தவறு**

4. பெருநகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு அதிக அளவு காரணமாக உள்ளன

**விடை: சரி**

5. மேய்ச்சலுக்காக கால்நடைகளை இடமாற்றம் செய்வது, பருவகால இம் பெயர்வு எனவும் அழைக்கப்படுகிறது

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. கூற்று: நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள் நகர்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்

காரணம்: கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம் பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல

**(அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு**

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

(இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(ஈ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. வசதியான இடத்தில் வாழ வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் நடைபெறும் இடம் பெயர்தல் ---------

**(அ) தன்னார்வ இம் பெயர்வு** (ஆ) தன்னார்வமில்லா இடம்பெயர்வு

(இ) உள்நாட்டு இடம் பெயர்வு (ஈ) சர்வதேச இடம் பெயர்வு

2. ------------ஆம் ஆண்டில் சர்வதேச புலம் பெயர்வில் இந்தியா மிகப்பெரிய நாடாக (17 மில்லியன்) உள்ளது

(அ) 2015 (ஆ) 2016 **(இ) 2017** (ஈ) 2018

3. 2018-2050ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலத்தில் உலக நகர்புற மக்கள் தொகை வளர்ச்சியில் --------------% பெற்றிருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது

(அ) 45 (ஆ) 55 (இ) 25 **(ஈ) 35**

4. தனிநபர் அல்லது குழுவாக வேறொரு புதிய நாட்டில் குடிபுகுதல் ------

**(அ) குடியிறக்கம்** (ஆ) குடியேற்றம் (இ) குடியேறுபவர் (ஈ) குடிபெயர்பவர்

5. உலகின் மக்கள் தொகை 2050 இல் ------------ % உயரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது

(அ) 58 **(ஆ) 68** (இ) 78 (ஈ) 88

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சமூக அறிவியலின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று --------------- இடம் பெயர்தல் ஆகும்

**விடை: மனிதன்**

2. பழங்காலத்தில் --------------த் தேடி மக்கள் இடம் பெயர்ந்தனர்

**விடை: உணவை**

3. மக்கள் வளம் மிகுந்த ----------- தேடி தொடர்ந்து குடி பெயர்ந்தனர்

**விடை: வேளாண் நிலத்தை**

4. ஓர் இடத்தை நோக்கி மக்களை ஈர்க்கும் காரணிகள் ------------ என அழைக்கப்படுகின்றன

**விடை: சாதக காரணிகள்**

5. மக்களை தங்கள் வசிப்பிடங்களிலிருந்து வெளியெறச் செய்யும் காரணிகள் ------------ என அழைக்கப்படுகின்றன

**விடை: பாதகக் காரணிகள்**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. வட அமெரிக்கா | அ. 68 |
| 2. ஐரோப்பா | ஆ. 50 |
| 3. ஓசியானியா | இ. 43 |
| 4. ஆசியா | ஈ. 82 |
| 5. ஆப்பிரிக்கா | உ. 74 |

**விடை: 1-ஈ. 2-உ, 3-அ, 4-ஆ. 5-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. கிராமபுறத்திலிருந்து நகர்புறத்தில் இடம் பெயர்தல் உள்நாட்டு இடப்பெயர்வு ஆகும்

**விடை: தவறு**

2. இயற்கை காரணிகள் பொருளாதாரக் காரணிகள், சமூக-கலாச்சாரம், மக்கள் தொகை மற்றும் அரசியல் காரணங்களினால் இடம் பெயர்வு நடைபெறுகிறது

**விடை: சரி**

3. சுற்றுச்சூழல் மாசடைவதற்கு நகரங்கள் மற்றும் மாநகரங்கள் முக்கியமான காரணிகளாகும்

**விடை: சரி**

4. வாகனப் பெருக்கம், காற்று மாசு அடைய காரணமாகின்றன

**விடை: சரி**

5. உலகின் எந்த ஒரு நகரத்திலும் நாள் முழுவதுக்கும் தேவையான அளவிற்கு முறையாக நீர் விநியோகம் செய்யப்படுகின்றன.

**விடை: தவறு**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. கூற்று: இடப்பெயர்வு ஒரு பகுதியிலுள்ள மக்கள் தொகையின் தொழில் கட்டமைப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் அப்பகுதியின் பொருளாதாரம் பாதிக்கிறது

காரணம்: அறிவார்ந்த மக்கள் வெளியேறுதல் என்பது பின்தங்கிய நாடுகளைச் சார்ந்த தொழில் திறன் கொண்ட மக்கள் சிறந்த வேலை வாய்ப்புகளைத் தேடி வளர்ந்த நாடுகளுக்குச் செல்கின்றனர்

**(அ) கூற்றும் காரணமும் சரி** (ஆ) கூற்றும் காரணமும் தவறு

(இ) கூற்று சரி காரணம் தவறு (ஈ) கூற்று தவறு காரணம் சரி

## அலகு – 5 இடர்கள்

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. காற்றில் உள்ள நைட்ரஜன் சதவீதம் ---------------

**(அ) 78.09%** (ஆ) 74.08% (இ) 80.07% (ஈ) 76.63%

2. இந்தியப் பெருங்கடலில் சுனாமி -----------ஆம் ஆண்டில் ஏற்பட்டது

(அ) 1990 **(ஆ) 2004** (இ) 2005 (ஈ) 2008

3. சுனாமி என்ற சொல் ------------- மொழியிலிருந்து பெறப்பட்டது

(அ) ஹிந்தி (ஆ) பிரெஞ்சு **(இ) ஜப்பானிய** (ஈ) ஜெர்மன்

4. புவி மேற்பரப்பு நீருக்கு -------------- எடுத்துக்காட்டாகும்

(அ) ஆர்டீசியன் கிணறு (ஆ) நிலத்தடி நீர் (இ) அடி பரப்பு நீர் **(ஈ) ஏரிகள்**

5. பருவமழை பொய்ப்பின் காரணமாக ---------- ஏற்படுகிறது

(அ) ஆவி சுருங்குதல் **(ஆ) வறட்சி** (இ) ஆவியாதல் (ஈ) மழைப்பொழிவு

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இடர்கள் -------------க்கு வழிவகுக்கிறது

**விடை: அழிவிற்கு**

2. நிலச்சரிவு -------------- இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்

**விடை: இயற்கை**

3. இடர்கள் தோன்றுவதன் அடிப்படையில் இடர்களை --------- வகைகளாகப் பிரிக்கலாம்

**விடை: எட்டு**

4. தீவிரவாதம் ------------- இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்

**விடை: மனிதனால் உருவாக்கப்படும்**

5. நைட்ரஜன் ஆக்சைடுகள் மனிதர்களைப் பாதிக்கும் ---------- மாசுபடுத்திகளாகும்

**விடை: முதன்மை**

6. செர்னோபில் அணு விபத்து ---------- ஆண்டில் நடைபெற்றது

**விடை: ஏப்ரல் 26, 1986**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. முதல்நிலை மாசுபடுத்திகள் | அ. தீவிரவாதம் |
| 2. அபாயகர கழிவுகள் | ஆ. சுனாமி |
| 3. நில அதிர்வு | இ. காலாவதியான மருந்துகள் |

4. வானிலையியல் வறட்சி ஈ. சல்பர் ஆக்சைடுகள்

5. மனிதனால் தூண்டப்பட்ட இடர் உ. மழைப்பொழிவு குறைதல்

**விடை: 1-ஈ. 2-இ, 3-ஆ, 4-உ, 5-அ**

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. காற்றில் உள்ள ஆக்ஸிஜன் சதவீதம் ----------

(அ) 21.95% (ஆ) 22.95% **(இ) 20.95%** (ஈ) 23.95%

2. சோவியத் யூனியன் அணு உலை விபத்து ---------

**(அ) ஏப்ரல் 26, 1986** (ஆ) ஏப்ரல் 26, 1987 (இ) ஏப்ரல் 26, 1988 (ஈ) ஏப்ரல் 26, 1989

3. இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமி -------------

(அ) 2005 டிசம்பர் 26 **(ஆ) 2004 டிசம்பர் 26** (இ) 2006 டிசம்பர் 26 (ஈ) 2007 டிசம்பர் 26

4. இந்தியாவில் சுமார் ------------- சதவீத நிலப்பரப்பு நிலச்சரிவு அபாயத்திற்கு உள்ளாகும் பகுதிகளாகும்

(அ) 18% (ஆ) 20% **(இ) 15%** (ஈ) 19%

5. அயன மண்டல சூறாவளிகள் காற்றின் வேகம் மணிக்கு ---------------- கிலோமீட்டர் வரை வீசக்கூடும்

(அ) 100 **(ஆ) 200** (இ) 300 (ஈ) 400

6. நாட்டின் மூன்றில் ஒரு பங்கு பகுதிகள் வறட்சியினால் பாதிக்கப்படுகின்றன. இது சுமார் -------- நிலப்பரப்பையும், மக்கள் தொகையில் ------------- கடுமையாக பாதிக்கிறது

**(அ) 16%, 12%** (ஆ) 18%, 14% (இ) 20%, 16% (ஈ) 22%, 20%

7. ஆண்டு மழைப்பொழிவு ---------- சென்டிமீட்டருக்கும் குறைவான மழைபெறும் பகுதிகள் இந்தியாவில் வறட்சிக்கு உள்ளாகும் பகுதிகளாகும்

(அ) 100 (ஆ) 80 **(இ) 60** (ஈ) 40

8. அதிக காற்றழுத்த மண்டலத்தை -------- என்ற வானிலை வரைபடத்தில் குறிக்கப்படுகிறது

**(அ) H** (ஆ) L (இ) P (ஈ) S

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ----- என்ற சொல் --------- என்ற பழமையான பிரெஞ்சு சொல்லிருந்து தோன்றியது

**விடை: ஹாசார்டு, ஹாசார்ட்**

2. சில இடர்கள் -------------க்காரணிகளால் உருவாகின்றன

**விடை: இயற்கை**

3. மனிதனால் உருவாக்கப்படும் இடர்கள் ----------------- , ------------- ஆகும்

**விடை: குண்டு வெடிப்புகள், அபாயகரமான கழிவுகள்**

4. ஆறுகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் உள்ள --------- கண்மூடித்தனமாக அழிப்பதால் அடிக்கடி வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி ஏற்படுகின்றன.

**விடை: மரங்களை**

5. சதுப்பு நிலக்காடுகள் அழிக்கப்படுவதால் ----------- அலைகள் கடற்கரைப் பகுதிகளில் இடரை உருவாக்குகின்றன

**விடை: சூறாவளி**

6. நில அதிர்வு, சுனாமி, நிலச்சரிவு, நிலம் அமிழ்தல் ஆகியவற்றால் ஏற்படும் இடர்கள் --------- இடர்கள்

**விடை: நிலவியல் சார்ந்த**

7. ------------என்பது புவியின் மேலோட்டில் திடீரென ஏற்படும் கடும் அதிர்வாகும்

**விடை: நிலஅதிர்வு**

8. வளிமண்டலத்தில் குறைந்த காற்றழுத்த பகுதிகளில் சுழலும் வலிமையான காற்றே சூறாவளி ------------ எனப்படும்

**விடை: புயல் காற்று**

9. அயன மண்டல சூறாவளிகள் ---------- உண்டாக்கும்

**விடை: அழிவை**

10. வெப்ப மண்டல சூறாவளிகள் காரணமாக தீடீரென்று ஏற்படும் கடல்நீர் எழுச்சியை ------- என்கிறோம்

**விடை: புயல் அலை**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. கிழக்கு கடற்கரை பகுதிகள் | அ. கடல்நீர் உட்புகுதல் |
| 2. மேற்கு கடற்கரை பகுதிகள் | ஆ. கார்பன்-டை-ஆக்சைடு |
| 3. நீர் மாசடைதல் | இ. ஓசோன் |
| 4. முதன்மை மாசு படுத்திகள் | ஈ. மகாராஷ்டிரா கடற்கரை |
| 5. வளிமண்டலம் | உ. ஒடிசாவின் வடபகுதி |

**விடை: 1-உ, 2-ஈ. 3-அ, 4-ஆ. 5-இ**

## குடிமையியல்

## அலகு – சமயச் சார்பின்மையைப் புரிந்து கொள்ளுதல்

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. சமயச்சார்பின்மை என்பது

(அ) அரசு அனைத்து சமயத்திற்கும் எதிரானது

(ஆ) அரசு ஒரே ஒரு சமயத்தை மட்டும் ஏற்றுக் கொள்கிறது

**(இ) எந்த சமயத்தைச் சார்ந்த குடிமகனும் சகிப்புத் தன்மையுடன் அமைதியாக இணக்கமாக வாழ்தல்**

(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

2. இந்தியா ஒரு ---------------- கொண்ட நாடாகும்

(அ) பல்வேறு சமயநம்பிக்கை (ஆ) பல்வேறு பண்பாட்டு நம்பிக்கை

**(இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்** (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

3. இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு

(அ) 1951 **(ஆ) 1976** (இ) 1974 (ஈ) 1967

4. பின்வருவனவற்றுள் எது இந்தியாவை சமயச்சார்பற்ற நாடாக விவரிக்கிறது?

(அ) அடிப்படை உரிமைகள் (ஆ) அடிப்படை கடமைகள்

(இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் **(ஈ) அரசியலமைப்பின் முகவுரை**

5. சமயச் சுதந்திர உரிமை எதனுடன் தொடர்புடையது

(அ) நீதித்துறை (ஆ) பாராளுமன்றம்

(இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கை **(ஈ) அடிப்படை உரிமைகள்**

6. அரசியலமைப்பின் பிரிவு 28 எந்த வகையான கல்வியை அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் தடைசெய்துள்ளது?

**(அ) சமய போதனைகள்** (ஆ) நீதி நெறிக்கல்வி

(இ) உடற்கல்வி (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

7. ஒரு நாடு சமயச்சார்பற்ற நாடாக எப்போது கருதப்படும் எனில் அது

(அ) ஒரு குறிப்பிட் சமயத்திற்கு முக்கியத்துவம் அளித்தால்

(ஆ) அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் சமய போதனைகளைத் தடை செய்தால்

**(இ) ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தால்**

(ஈ) எந்த சமய நம்பிக்கைகளையும் பரப்ப தடை விதித்தால்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சமயம் நமக்கு -------------- போதிக்கவில்லை

**விடை: பகைமை**

2. சமயச்சார்பின்மை ஜனநாயகத்தின் ஒரு பகுதி அது ----------அளிக்கிறது

**விடை: ஒற்றுமையை**

3. ---------- என்பது கடவுள் மற்றும் கடவுள்கள் மீது நமபிக்கையற்றிருப்பதாகும்

**விடை: நாத்திகம்**

4. நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கம் ------------ மற்றும் ------------ ஊக்குவிப்பதாகும்

**விடை: தேசிய ஒற்றுமையும், ஒருமைபாட்டையும்**

5. பிரிவு 15 சமயம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் --------- காட்டுவதைத் தடை செய்கிறது

**விடை: பாகுபாடு**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. நாத்திகம் | அ. சமயச்சார்பின்மை என்ற பதத்தை உருவாக்கியவர் |
| 2. குழந்தைகள் | ஆ. சமூகச் சீர்திருத்தவாதி |
| 3. தீன் - இலாஹி | இ. கடவுள் நம்பிக்கையற்றிருப்பது |
| 4. அரசியலமைப்பு | ஈ. வருங்கால குடிமக்கள் |
| 5. ஹோல்யோக் | உ. தெய்வீக நம்பிக்கை |
| 6. இராஜாராம் மோகன்ராய் | ஊ. 1950 |

**விடை: 1-இ, 2-ஈ. 3-உ, 4-ஊ, 5-அ, 6-ஆ.**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. இந்திய நாட்டிற்கென ஒரு சமயம் உள்ளது

**விடை: தவறு**

2. சமயச்சார்பின்மை என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டுள்ளது

**விடை: தவறு**

3. மொகலாய பேரரசர் அக்பர் சமயச் சகிப்புத் தன்மைக் கொள்கையைப் பின்பற்றினார்

**விடை: சரி**

4. சமண சமயம் சீனாவில் தோன்றியது

**விடை: தவறு**

5. இந்திய அரசாங்கம் அனைத்துச் சமய விழாக்களுக்கும் விடுமுறையை அறிவிக்கிறது

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. i) இந்தியா போன்ற சமயப் பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்குச் சமயச்சார்பின்மை விலைமதிப்பற்ற ஒன்றாகும்

ii) சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை

iii) அரசியலமைப்பு பிரிவு 26 ஒரு குறிப்பிட்ட சமயத்திற்காக வரி செலுத்துவதற்கு ஊக்கமளிக்கிறது

iv) அக்பரின் கல்லறை ஆக்ராவிற்கு அருகிலுள்ள சிக்கந்தராவில் உள்ளது

(அ) i, ii மட்டும் (ஆ) ii, iii மட்டும் (இ) iv மட்டும் **(ஈ) i, ii, iv மட்டும்**

2. கூற்று : ஒரு வெளிநாட்டவர் இந்தியாவில் தனது சமயத்தைப் பின்பற்றலாம்

காரணம்: அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம் இந்தியர்களுக்கு மட்டுமல்லாமல் வெளிநாட்டவருக்கும் உண்டு

i) கூற்று சரி காரணம் தவறு

**ii) கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது**

iii) கூற்று தவறு, காரணம் சரி

iv) கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை

3. கூற்று : இந்தியாவில் சமயச்சார்பின்மை என்ற கொள்கை மிக்க மதிப்புள்ளதாகும்

காரணம்: இந்தியா பல்வேறு சமயம் மற்றும் பன்முக கலாச்சாரம் கொண்ட நாடாகும்

**i) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது**

ii) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை

iii) கூற்று தவறு, காரணம் சரி

iv) இரண்டும் தவறு

**தவறான இணையைக் கண்டறியும்:**

**1. i) தீன் இலாகி – ஒரு புத்தகம்**

ii) கஜீராஹோ - இந்து கோவில்

iii) அசோகர் - பாறைக் கல்வெட்டு

iv) இக்பால் - கவிஞர்

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோல் என்பவர் ---------- பத்திரிக்கை எழுத்தாளர் ஆவார்

**(அ) ஆங்கிலேய** (ஆ) இத்தாலிய (இ) பிரெஞ்சு (ஈ) அமெரிக்க

2. ----------- கோட்பாடு எந்த சமயத்தையும் பின்பற்ற அரசு அனுமதியளித்தல்

(அ) சமத்துவ **(ஆ) சுதந்திர** (இ) நடுநிலைமை (ஈ) எதுவுமில்லை

3. -------------ல் நடைபெற்ற பம்பாய் மாநிலம் - ரத்திலால் வழக்கில் மேன்மைமிக்க உச்ச நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டது

(அ) 1951 (ஆ) 1955 **(இ) 1954** (ஈ) 1956

4. ------------ சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதை தடை செய்கிறது

**(அ) பிரிவு 15** (ஆ) பிரிவு 16 (இ) பிரிவு 26 (ஈ) பிரிவு 28

5. --------- பிரிவு எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் பரப்பவும் உரிமை வழங்குகிறது

(அ) 26 (ஆ) 27 **(இ) 25 (1)** (ஈ) 29 (2)

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சமயச்சார்பின்மை என்ற சொல் லத்தீன் வார்த்தையான --------- என்பதிலிருந்து உருவானது

**விடை: செகுலம்**

2. இந்தியா போன்று பல்வேறு சமய பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்கு -------- என்பது விலை மதிப்பற்றதாகும்

**விடை: சமயச்சார்பின்மை**

3. சமயச்சார்பின்மை என்பது அரசையும் மதத்தையும் பிரிக்கும் ---------- ஆகும்

**விடை: கோட்பாடு**

4. அனைத்து குடிமக்களும் எந்த சமய நம்பிக்கை கொண்டிருந்தாலும் ------------ நுழைய தகுதி வாய்ந்தவர்கள் ஆவர்

**விடை: அரசுப்பணியில்**

5. சமய சார்பற்ற என்ற சொல்லானது --------------ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை

**விடை: 1950**

6. 1976ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட -------------வது திருத்தத்தின் மூலம் முகவுரையில் சார்பற்ற என்ற சொல் சேர்க்கப்பட்டது

**விடை: 42**

7. சமயச் சார்பற்ற இந்திய நாடு அனைத்து சமய விழாக்களுக்கும் -------------- அறிவிக்கிறது

**விடை: பொது விடுமுறை**

8. எந்த சமயத்திற்கும் அரசு முன்னுரிமை --------- அளிப்பதில்லை

**விடை: சலுகை**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. இராஜாராம் மோகன்ராய் | அ. அசோகர் |
| 2. சமயசார்பின்மை | ஆ. முகலாயப் பேரரசர் |
| 3. பாறை அரசாணை | இ. 1976 |
| 4. அக்பர் | ஈ. லத்தீன் மொழி |

5. 42வது சட்டத்திருத்தம் உ. சமூக சீர்திருத்தவாதி

**விடை: 1-உ, 2-ஈ. 3-அ, 4-ஆ. 5-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. சமய சார்பின்மை என்பது அரசியலமைப்பின் ஒரு அங்கமாகும்

   **விடை: சரி**

2. சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது

   **விடை: தவறு**

3. சமயசார்பற்ற இந்திய நாடானது அனைத்து சமய விழாக்களுக்கும் பொது விடுமுறை அறிவிக்கிறது

   **விடை: சரி**

4. கஜிராஹோவில் காணப்படும் இந்து கோவில்கள் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும்

   **விடை: தவறு**

5. பிரிவு 26 சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரத்தை குறிப்பதாகும்

   **விடை: சரி**

## அலகு – 4 மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ------------ மனித உரிமைகளைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது

   **(அ) ஐ.நா.சபை** (ஆ) உச்சநீதிமன்றம் (இ) சர்வதேச நீதிமன்றம் (ஈ) எதுவுமில்லை

2. 1995ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் -----------இல் கூடினர்

   **(அ) பெய்ஜிங்** (ஆ) நியூயார்க் (இ) டெல்லி (ஈ) எதுவுமில்லை

3. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு

   (அ) 1990 **(ஆ) 1993** (இ) 1978 (ஈ) 1979

4. ஐ.நா.சபை 1979ஆம் ஆண்டை ------------ சர்வதேச ஆண்டாக அறிவித்தது

   (அ) பெண் குழந்தைகள் **(ஆ) குழந்தைகள்**

   (இ) பெண்கள் (ஈ) இவற்றில் எதுவுமில்லை

5. உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் எது?

   (அ) டிசம்பர் 9 **(ஆ) டிசம்பர் 10** (இ) டிசம்பர் 11 (ஈ) டிசம்பர் 12

6. மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என அழைக்கப்படுவது எது?

   **(அ) மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு (UDHRC)**

(ஆ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC)

(இ) மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC)

(ஈ) சர்வதேசப் பெண்கள் ஆண்டு

7. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படுபவர் யார்?

(அ) ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி

**(ஆ) ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி**

(இ) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஏதேனும் நீதிபதி

(ஈ) ஏதேனும் ஒரு நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி

8. உலக மனித உரிமைகள் அறிவிப்பில் உள்ள சட்டப்பிரிவுகளின் எண்ணிக்கை யாவை?

(அ) 20 **(ஆ) 30** (இ) 40 (ஈ) 50

9. தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவரின் பதவிக் காலம் என்ன?

(அ) 5 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை

(ஆ) 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

(இ) 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

**(ஈ) 5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை**

10. தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

**(அ) புதுடெல்லி** (ஆ) மும்பை (இ) அகமதாபாத் (ஈ) கொல்கத்தா

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஒவ்வொரு தனிமனிதனும் கண்ணியமான வாழ்க்கை வாழ ---------- உண்டு

**விடை: உரிமை**

2. மனித உரிமைகள் என்பது --------- உரிமைகள்

**விடை: அடிப்படை**

3. மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு --------

**விடை: 17 ஏப்ரல் 1997**

4. இந்திய அரசியலமைப்பின் 24வது சட்டப்பிரிவு ---------------ஐ தடைசெய்கிறது

**விடை: குழந்தை தொழிலாளர் முறையை**

5. ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட ஆண்டு -----------

**விடை: 24, அக்டோபர் 1945**

**பொருத்துக:**

| | | |
|---|---|---|
| 1. | 1. எலினார் ரூஸ்வெல்ட் | அ. உலகின் முதல் மனித உரிமைகள் சாசனம் |
| | 2. சைரஸ் சிலிண்டர் | ஆ. 1997 |
| | 3. பெண்களை கேலி செய்வதற்கு எதிரான சட்டம் | இ. அடிமைத் தனத்திலிருந்து விடுதலை |
| | 4. குழந்தை உதவி மைய எண் | ஈ. மனித உரிமைகளுக்கான ஆணையம் |
| | 5. வாழ்வியல் உரிமைகள் | உ. வாக்களிக்கும் உரிமை |
| | 6. அரசியல் உரிமை | ஊ. 1098 |

**விடை: 1-ஈ, 2-அ, 3-ஆ. 4-ஊ, 5-இ, 6-உ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை

**விடை: தவறு**

2. மனித மற்றும் குடிமகனின் உரிமைகள் அறிவிப்பு இந்தியாவில் அறிவிக்கப்பட்டது

**விடை: தவறு**

3. 1993ஆம் ஆண்டு மனித உரிமைச் சட்டம் தேசிய மனித உரிமைகள் ஆணையம் உருவாக வழிவகுத்தது

**விடை: சரி**

4. பாதிக்கப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது

**விடை: தவறு**

5. மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய, மாநில அளவிலான மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டுள்ளது

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. தவறான கூற்றை கண்டறியவும்

(அ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு சட்டரீதியான அமைப்பாகும்

**(ஆ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஓர் அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகும்**

(இ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு சுதந்திரமான அமைப்பாகும்

(ஈ)தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு பலதரப்பு நிறுவனங்களைக் கொண்டதாகும்

2. தேசிய மனித உரிமைகள் ஆணையம் குறித்து பின்வரும் எந்த கூற்று சரியானது அல்ல

(அ) இது 1993இல் நிறுவப்பட்டது

(ஆ) மனித உரிமை மீறல் வழக்குகளில் குற்றவாளியைத் தண்டிக்க ஆணையத்திற்கு எந்த உரிமையும் இல்லை

**(இ) இந்த ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள்**

(ஈ) இந்த ஆணையம் தனது ஆண்ட அறிக்கையை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்புகிறது

3. கூற்று : டிசம்பர் 10ஆம் ஆண்டு நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது

காரணம்: இது எலினார் ரூஸ்வெல்டின் பிறந்த நாளை நினைவு கூறுகிறது

**(அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை**

(ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது

(இ) கூற்று காரணம் இரண்டும் சரி

(ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

4. பின்வரும் கூற்றை ஆராய்க

1. மாநில மனித உரிமைகள் ஆணையம் பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு ஆகும்

2. மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாகும்

மேற்கூறிய கூற்றுகளில் எது/எவை சரியானது/சரியானவை?

(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் (இ) 1, 2 **(ஈ) எதுவுமில்லை**

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு --------

**(அ) 1945, அக்டோபர் 24ஆம் நாள்** (ஆ) 1948, அக்டோபர் 24ஆம் நாள்

(இ) 1950, அக்டோபர் 24ஆம் நாள் (ஈ) 1946, அக்டோபர் 24ஆம் நாள்

2. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பவர் ---------

(அ) பிரதமர் (ஆ) முதலமைச்சர் **(இ) குடியரசுத்தலைவர்** (ஈ) துணை குடியரசுத்தலைவர்

3. ---------- ஒரு முக்கியமான தேசியச் சொத்தாக கருதப்படுகிறது

**(அ) குழந்தை** (ஆ) வளங்கள் (இ) கல்வி (ஈ) நலவாழ்வு

4. சர்வதேச பெண்கள் ஆண்டு ----

(அ) 1976 **(ஆ) 1978** (இ) 1980 (ஈ) 1985

5. ---------- சர்வதேச குழந்தைகள் ஆண்டு என ஐ.நா. சபை அறிவித்துள்ளது

(அ) 1972 (ஆ) 1976 **(இ) 1979** (ஈ) 1981

6. போக்சோ சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு -----

**(அ) 2012** (ஆ) 2014 (இ) 2016 (ஈ) 2010

7. ------------ உலக மகளிர் மாநாடு 1995ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்றது

**(அ) நான்காவது** (ஆ) இரண்டாவது (இ) மூன்றாவது (ஈ) முதலாவது

8. இந்து விதவை மறுமணச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ---------

(அ) 1956 (ஆ) 1955 **(இ) 1856** (இ) 1861

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மனித உரிமைகளை உலக அளவில் அறிவித்த பெருமை ------------ சாரும்

**விடை: ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையையே**

2. வாக்களிக்க உரிமை, பேச்சுரிமை மற்றும் தகவல்களை பெறும் உரிமை ஆகியவை ---------களுள் அடங்கும்

**விடை: அரசியல் உரிமை**

3. கல்வி, சுகாதாரம், உணவு, உடை தங்குமிடம் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகிய உரிமைகள் --------- ஆகும்

**விடை: சமூக உரிமைகள்**

4. --------- உரிமைகள் சமூகத்தினால் உருவாக்கப்படுகின்றன

**விடை: சிவில்**

5. இந்தியாவின் --------------- ஆணையம் (NHRC) 1993ஆம் ஆண்டு நிறுவப்பட்டது

**விடை: தேசிய மனித உரிமைகள்**

6. தேசிய மனித உரிமைகள் ஆணையம் --------- பிரிவுகளைக் கொண்டுள்ளது

**விடை: 5**

7. தமிழ்நாட்டில் ---------ஆம் ஆண்டு மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது

**விடை: 1997**

8. குழந்தை ஒரு முக்கியமான ---------- கருதப்படுகிறது

**விடை: தேசிய சொத்தாக**

9. இந்தியாவில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க ---------- இயற்றப்பட்டுள்ளன

**விடை: சட்டங்கள்**

10. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கும் சட்டம் ---------

**விடை: போக்சோ (Pocso)**

**பொருத்துக:**

1. 1. குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்கிறது அ. பிரிவு 39

2. ஆரோக்கியமாக குழந்தைகள் வளர வழிவகைச் செய்கிறது ஆ. பிரிவு 45

3. 6 வயது வரைஅனைத்து குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது இ. பிரிவு 24

**விடை: 1-இ, 2-அ, 3-ஆ**

2. 1. குழந்தைகளுக்கான உதவி மைய எண் அ. 2012

2. போக்சோ சட்டம் ஆ. 1979

3. சர்வதேச பெண்கள் ஆண்டு இ. 1098

4. சர்வதேச குழந்தைகள் ஆண்டு ஈ. 2005

5. வன்கொடுமை தடுப்பு சட்டம் உ. 1978

**விடை: 1-இ, 2-அ, 3-உ, 4-ஆ. 5-ஈ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. பெண்களின் திருமண வயது 21 என்று சட்டப்பூர்வமாக்கிறது

**விடை: சரி**

2. பெண்கள் தங்கள் பெற்றோர்களின் சொத்தினை மரபு வழியாக பெறுவதை உறுதி செய்யவில்லை

**விடை: தவறு**

3. வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2006இல் இயற்றப்பட்டது

**விடை: தவறு**

4. தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஆறு பிரிவுகளைக் கொண்டுள்ளது

**விடை: தவறு**

5. உலக மனித உரிமைகள் அறிவிப்பு 500க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது

**விடை: சரி**

**தவறான இணையைக் கண்டறியும்:**

1. **அ. தமிழ்நாட்டில் 1987 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது**

ஆ. இது மாநில அளவில் செயல்படுகிறது

இ. இது ஒரு தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கியது

ஈ. உலகெங்கிலும் பல நிறுவனங்களும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முயற்சிகளை எடுத்துள்ளன.

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. கூற்று: ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் பெண்கள் மற்’றும் ஆண்கள் இருவருக்கும் சமமான உரிமைகளை உறுதி செய்கிறது

காரணம்: பெண்களுக்கு தங்களது உரிமைகளை முழுமையாகவும் சமமாகவும் அனுபவிக்கவும், அனைத்து பாகுபாடுகளிலிருந்தும் விடுபடவும் உரிமை உள்ளது

(அ)கூற்றும் சரி ஆனால் காரணம் தவறு (ஆ) கூற்றும் காரணமும் தவறு

**(இ) கூற்றும் காரணமும் சரி** (ஈ) காரணம் சரி கூற்று தவறு

2. பின்வரும் கூற்றை ஆராய்க:

1. பெய்ஜிங் மாநாட்டின் இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக யுனிபெம் (UNIFEM) என்றழைக்கப்படும் பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாடு நிதி அமைப்பு 1995 முதல் செயல்பட்டு வருகிறது

2. பெண்களை கேலி செய்வதற்கு எதிரானச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்ட 1997

மேற்கூறிய கூற்றுகளில் எது சரியானது?

(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் **(இ) 1, 2** (ஈ) எதுவுமில்லை

## அலகு – 5 சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமறைகள்

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. சிவப்பு விளக்கு ஒளிரும் போது

(அ) பாதை தெளிவாக இருக்கும் போது நீங்கள் தொடர்ந்து செல்லலாம்

**(ஆ) நீங்கள் வாகனத்தை நிறுத்தி பச்சை விளக்கு ஒளிரும் வரை காத்திருக்க வேண்டும்**

(இ) உன் நண்பனின் குறுந்தகவலுக்கு விரைவாக பதில் அனுப்பலாம்

(ஈ) செல்லிடப்பேசியில் உரையாடலாம்

2. பாதசாரிகள் சாலையைக் கடக்குமிடம்

(அ) எங்குவேண்டுமானாலும் (ஆ) சமிக்ஞைகளுக்கு அருகில்

**(இ) வரிகோட்டு பாதையில்** (ஈ) இவற்றில் எதுவுமில்லை

3. சாலை பாதுகாப்பு வாரம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் மாதம்

(அ) டிசம்பர் **(ஆ) ஜனவரி** (இ) மார்ச் (ஈ) மே

4. அவசர காலத்தில், அவசர சிகிச்சை ஊர்தி சேவைக்காக அழைக்க வேண்டிய எண்.

**(அ) 108** (ஆ) 100 (இ) 106 (ஈ) 101

5. சாலை விபத்துக்களுக்கான காரணங்கள் யாவை?

(அ) அதிவேகம் (ஆ) குடிபோதையில் ஓட்டுதல்

(இ) ஓட்டுநர்கள் கவனச்சிதறல் **(ஈ) இவை அனைத்தும்**

6. போக்குவரத்துக் குறியீடுகளின் முதல் வகை

**(அ) கட்டாய குறியீடுகள்** (ஆ) எச்சரிக்கை குறியீடுகள்

(இ) தகவல் குறியீடுகள் (ஈ) இவற்றில் எதுவுமில்லை

7. சேது பாரதம் திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு

(அ) 2014 (ஆ) 2015 **(இ) 2016** (ஈ) 2017

8. ABS என்பதனை விரிவாக்கம் செய்க:

(அ) எதிர் நிறுத்தி ஆரம்பம் (Anti Brake Start)

(ஆ) வருடாந்திர அடிப்படை அமைப்பு (Annual Bare System)

**(இ) பூட்டுதலில்லா நிறுத்தம் அமைப்பு (Anti-lock Braking System)**

(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

9. வளைவில் முந்துவது

(அ அனுமதிக்கப்படுகிறது **(ஆ) அனுமதியில்லை**

(இ) கவனத்துடன் அனுமதிக்கப்படுகிறது (ஈ) நமது விருப்பம்

10. அவசர சிகிச்சை ஊர்தி வரும்பொழுது

(அ) முன்பக்கம் வாகனம் இல்லாத போது கடந்து செல்ல அனுமதிக்க வேண்டும்

(ஆ) முன்னுரிமை எதுவும் அளிக்கத் தேவையில்லை

**(இ) நம் வாகனத்தினைச் சாலை ஓரமாக செலுத்தி தடையில்லாமல் கடக்க அனுமதிக்க வேண்டும்**

(ஈ) அவசர சிகிச்சை ஊர்தியின் பின்புறம் மிகுந்த வேகத்துடன் பின் தொடர வேண்டும்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வாகனம் ஓட்டும் பொழுது எப்போதும் --------- புறம் செல்லவும்

**விடை: இடது**

2. கட்டாய குறியீடுகள் -------- வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கும்

**விடை: வட்ட**

3. ---------- வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றது

**விடை: வேக கட்டப்பாட்டுக் கருவி**

4. அதிக வேகம் : -------------- ஆபத்து

**விடை: அதிக**

5. நான்கு சக்கர வாகனத்தில் ----------- அணிவதும் இரு சக்கர வாகனத்தில் ------------- அணிவதம் கட்டாயம் எனச் சட்டம் உள்ளது

**விடை: இருக்கை பட்டை, தலைக்கவசம்**

**பொருத்துக:**

| | | |
|---|---|---|
| 1. | 1. மாசுக்கட்டுப்பாட்டுச் சான்றிதழ் | அ. வரிக்கோட்டு பாதை |
| | 2. புதிய சிற்றுந்துகளுக்கான ஒரு முறை வரி | ஆ. சாலைப்பாதுகாப்பு குறித்த சித்திர புத்தகம் |
| | 3. பாதசாரி | இ. ஆறு மாதங்கள் |
| | 4. பிரேசிலியா பிரகடனம் | ஈ. 15 வருடங்கள் |
| | 5. சுவச்ச சே.ஃ.பர் | உ. பன்னாட்டு மாநாடு |

**விடை: 1-இ, 2-ஈ, 3-அ, 4-உ, 5-ஆ.**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. சாலை விபத்துகள் தொடர்பான பிரச்சனை சாலையில் மட்டுமே உள்ளது

   **விடை: தவறு**

2. பாதை தடத்தை மாற்றும் முன்பு கண்ணாடியினைப் பார்க்க வேண்டும்

   **விடை: சரி**

3. ஒளிரும் மஞ்சள் விளக்கு, வேகத்தினை குறைத்தும் எச்சரிக்கையுடனும் செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கின்றது

   **விடை: சரி**

4. இருசக்கர வண்டியில் ஒருவர் மட்டுமே பின் இருக்கையில் அமர அனுமதிக்கப்படுகிறார்கள்

   **விடை: சரி**

5. சாலைகள் மனிதனின் மிக மோசமான கண்டுபிடிப்புகளில் ஒன்று

   **விடை: தவறு**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. பின்வரும் கூற்று(களில்) சரியல்லாதது எது?

   i) முன்புற வாகனத்திலிருந்து சரியான இடைவெளியில் தொடரவும்

   ii) வேக கட்டுப்பாட்டு அளவினைக் கடைபிடிக்க வேண்டும், ஒரு போதும் வேகத்திற்கான எல்லையினைத் தாண்டக்கூடாது

   iii) வாகனம் ஓட்டும்போது இருக்கை வார்பட்டை அணியத் தேவையில்லை

   iv) வளைவுகளிலும் திருப்பங்களிலும் வேகத்தினைக் குறைக்க வேண்டாம்

   (அ) i, iii மட்டும் (ஆ) ii, iv மட்டும் (இ) i, ii மட்டும் **(ஈ) iii, iv மட்டும்**

2. கூற்று : மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுவது விபத்துக்களை ஏற்படுத்துகின்றது

   காரணம்: மயக்கம் காரணமாக பார்வை பாதிக்கப்படுகின்றது

   **அ. கூற்று சரி மற்றும் காரணம் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்**

ஆ. கூற்று சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

இ. கூற்று சரி, ஆனால் காரணம் தவறு

ஈ. கூற்று, தவறு காரணம் தவறு

3. கூற்று : சாலை குறியீடுகள் எளிதில் புரிந்துகொள்ள கூடிய ஒன்று

காரணம்: அவைகள் பெரும்பாலும் படங்களாக இருக்கின்றன

(அ) கூற்று சரி, காரணம் தவறு

**(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்**

(இ) கூற்று தவறு, காரணம் சரி

(ஈ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

**தவறான இணையைக் கண்டறியும்:**

1. அ) வளைவுகளில் மெதுவாக செல்

ஆ) வேக கட்டுப்பாட்டு அளவினைக் கடைபிடி

**இ) வாகனம் ஓட்டும் பொழுது செல்லிடப் பேசியைப் பயன்படுத்து**

ஈ) சாலைகளில் நடப்பதைத் தவிர்க்கவும்

**கூடுதல் வினாக்கள்**

**சரியான விடையைத் தெரிவு செய்க:**

1. ------------ பெற விரும்பும் ஒருவர் போக்குவரத்து குறியீடுகள் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டியதை அரசு கட்டாயம் ஆக்கியுள்ளது

**(அ) ஓட்டுநர் உரிமம்** (ஆ) வாக்காளர் அடையாள அட்டை

(இ) வங்கி கணக்கு புத்தகம் (ஈ) ஆதார் எண்

2. மோட்டார் வாகனச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு --------

(அ) 1988 **(ஆ) 1989** (இ) 1978 (ஈ) 1990

3. இந்திய தண்டனைச் சட்டம் --------- பிரிவின் கீழ் ஓட்டுநர் மீது கிரிமினல் குற்ற வழக்கு பதிவு செய்யப்படும்

(அ) 303 (ஆ) 305A **(இ) 304 A** (ஈ) 305

4. ------------- குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர்களின் வாகனங்களில் பயன்படுத்தப்படும்

**(அ) சிவப்பு வண்ணத்தகடு** (ஆ) நீல வண்ணத்தகடு

(இ) வெள்ளை வண்ணத்தகடு (ஈ) மஞ்சள் வண்ணத்தகடு

5. தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாக மற்றும் தடையற்ற பயணம் செய்ய பாலங்களை கட்டுவதற்கான திட்டம் ------------ல் தொடங்கப்பட்டது

(அ) 2014 **(ஆ) 2016** (இ) 2012 (ஈ) 2013

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஒரு வாகனத்தின் பின்னால் மிக நெருக்கமாக பின்தொடர்தல் என்பது ----------- மற்றும் ஆபத்தான பழக்கமும் ஆகும்

**விடை: சட்ட விரோதம்**

2. மது அருந்தியதை கண்டறிய --------- பரிசோதனை செய்யப்படுகிறது

**விடை: சீரற்ற சுவாச**

3. வாகனம் ஓட்டும்போது செல்லிட பேசியில் பேசுவது பெரிய ---------- உள்ளது

**விடை: கவனச்சிதறலாக**

4. சாலை ------------ பெரும்பாலும் படங்களாக இருப்பதால் புரிந்து கொள்வது கடினம் அல்ல

**விடை: குறியீடுகள்**

5. --------- வகையான போக்குவரத்து குறியீடுகள் உள்ளன

**விடை: மூன்று**

**பொருத்துக:**

1.

| | |
|---|---|
| 1. மோட்டார் வாகனச் சட்டம் | அ. கட்டாய ஆவணங்கள் |
| 2. வெள்ளை வண்ணத்தகடு | ஆ. 2016 |
| 3. ஓட்டுநர் உரிமம் | இ. வணிக ரீதியான வாகனங்களுக்கானதாகும் |
| 4. பாலங்கள் கட்டும் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு | ஈ. 1988 |
| 5. மஞ்சள் வண்ணத்தகடு | உ. இது சாதாரண குடிமகனுக்கு சொந்தமான வாகனம் என்பதாகும் |

**விடை: 1-ஈ, 2-உ, 3-அ, 4-ஆ, 5-இ**

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. சிவப்பு சமிக்ஞை நிறுத்தக் கோட்டிற்கு பின்னால் வாகனங்களை நிறுத்த வேண்டும்

**விடை: சரி**

2. இருவழி சாலையில் வலப்புறம் மட்டுமே ஓட்டுநர் வாகனத்தை செலுத்த வேண்டும்

**விடை: தவறு**

3. இரு சக்கர வண்டியின் பின் இருக்கையில் இருவர் அமர அனுமதிக்கப்படுகின்றனர்

**விடை: தவறு**

4. அவசர காலத்தில் அபாயகுறிக்காட்டிகளை பயன்படுத்த வேண்டும். அது இரண்டு குறிக்காட்டிகளையும் ஒரே நேரத்தில் ஒளிரச் செய்யும்

**விடை: சரி**

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்**

1. i) சாலை பாதுகாப்பு என்பது சாலையில் பயணிக்கும் அனைவரின் பாதுகாப்பையும் பாதுகாப்பு வழங்குவதையும் குறிக்கிறது

ii) சாலை விபத்துக்கள் விரும்பத்தக்க நிகழ்வுகள் ஆகும்

iii) சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் சாலை விபத்துக்களை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

iv) இருசக்கர வாகனங்களில் செல்லும்பொழுது கட்டாயமாக தலைக்கவசம் அணிவிக்க வேண்டியதில்லை

**(அ) i மற்றும் iii சரி** (ஆ) ii மற்றும் iv சரி

(இ) ii மற்றும் iii சரி (ஈ) iii மற்றும் iv சரி

winmeen.com